575

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الله هادى

# இரு பரீட்சைகள்.

575
3-55

வெளியிடுவோர்:
இஸ்லாமிய ஊழியர் சங்கம்,
...ங்காகுரிச்சி, திருச்சி ஜில்லா.

பிரசுரம்-1. [ரமளான் 1373

# இஸ்லாமிய ஊழியர் சங்க நோக்கங்கள்.

சொல்வீராக: நிச்சயமாக எனது தொழுகையும், எனது வணக்கங்களும், என் ஜீவியமும், என் மரணமும் சர்வலோக ரக்ஷகனான அல்லாஹ்வுக்கே! *(குர்ஆன் 6: 163)*.

1. இஸ்லாமிய உண்மைகளை அறிவது.

2. அவைகளின்படி இயன்றவரை நடப்பது.

3. அவைகளைப் போதிப்பது.

4. அவைகள் நிலைப்பதற்காகப் பாடுபடுவது.

5. அவைகளை அனுஷ்டிப்பதற்கான வசதிகளை மக்களுக்கு இயன்றவரை செய்து இகபர முன்னேற்றத்திற்காக இஸ்லாமிய ஷரீஅத் அனுமதிக்கும் முறையில் ஊழியஞ் செய்வது.

சங்கத்தின் 3வது நோக்கத்தைத் தழுவியும், 8—5—54உ நடந்த சங்கக்கூட்டத்தின் ஏகோபித்த தீர்மானப்படியும் இப் பிரசுரம் வெளியிடப்பெற்றது.

# இரு பரீட்சைகள்

OFF... REGISTRAR OF ... MADRAS

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

உத்தமமொழியாம் கலிமா தய்யிபாவை ஓதியதன் மூலம் (ஈமான்) விசுவாசம்கொண்டோம் என்று கூறுபவர்கள் அனைவரையும், 'அவர்கள் உண்மையாகக் கூறியவர்கள்தானா?' என்பதற்காக தினசரி ஐங்காலத் தொழுகையையும் வருடத்தில் ரமளான்மாதம் முழுவதும் நோன்பிருக்க வேண்டுமென்பதையும் இரு பிரதான பரீட்சைகளாக ஏற்படுத்தி இப்பரீட்சைகளில் தேறியவர்களுக்கு எண்ணற்ற சன்மானங்கள் தருவதாகக் கூறியுள்ள வல்ல நாயன் அல்லாஹுதஆலாவிற்கே சர்வ புகழும், துதியும் உரியனவாகும்.

அல்லாஹுதஆலாவின் கட்டளைகளைத் தாமே முதலில்செய்து, நிறைவேற்றி, நடைமுறையில் செய்துகொண்டு, வழிகாட்டி, ஏனையோரையும் அவைகளை அனுஷ்டிக்குமாறு செய்து, தம் வாழ்நாளிலேயே இவ்வுலகில் வெற்றிகண்டு, இவ்வுலக முடிவு வரை எல்லா மனிதர்களுக்கும் அழகிய முன்மாதிரியாய்த் திகழும், இறுதித்தூதர் எம்பெருமான் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது கிளையார், தோழர், துயர்ந்தோர் அனைவர் மீதும் கருணையும், சாந்தியும் உண்டாவதாகுக!

أَحَسِبَ النَّاسُ أَنْ يُتْرَكُوا أَنْ يَقُولُوا آمَنَّا وَهُمْ

لَا يُفْتَنُونَ ○

" நாங்கள் (ஈமான்) விசுவாசம் கொண்டோமென்று கூறுபவர்களை பரீட்சிக்கப்படாமல் விட்டுவிடப்படுமென்று மனிதர்கள் எண்ணிக்கொண்டார்களா? " (குர்ஆன் 29: 2).

وَلَقَدْ فَتَنَّا الَّذِينَ مِنْ قَبْلِهِمْ فَلَيَعْلَمَنَّ اللَّهُ الَّذِينَ

صَدَقُوا وَلَيَعْلَمَنَّ الْكَاذِبِينَ ○

" நிச்சயமாக நாம் அவர்களுக்கு முன்னிருந்தவர்களையும் பரீட்சித்தே யிருக்கிறோம். எனவே இவர்களில் உண்மை கூறுபவர்கள் எவர்கள் என்பதை நிச்சயமாக அல்லாஹ் (பரீட்சித்துத்) தெரிந்துகொள்வான். (அவ்வாறே இதில்) பொய் கூறுபவர்கள் எவர்கள் என்பதையும் (நிச்சயமாக அவன் பரீட்சித்து) அறிந்துகொள்வான்". (குர். 29: 3).

அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி,

இஸ்லாமிய சகோதரர்களே! சகோதரிகளே!!

இளைஞர்களே!!! பெரியோர்களே!!!!

மேலேகண்ட திருமறையின் இரு வசனங்கள் மூலம் (ஈமான்) விசுவாசம் கொண்டோமென்று கூறுபவர்களை அவர்கள் கூறுவது மெய்யா? பொய்யா? என்பதை இறைவன் பரீட்சிக்காமல் விட மாட்டான் என்பதும் இதற்கு முன்பிருந்தவர்களையும் பரீட்சித்தே யிருக்கிறான்; இனியும் பரீட்சிக்கிறான் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. எனவே (ஈமான்) விசுவாசம் கொண்டோமென்று கலிமா

ஓதும் நம்மவர்களை நாம் விசுவாசிகள் என்று கூறுவது மெய்யா? பொய்யா? என்பதை அறிய இறைவன் நிச்சயமாகப் பரீட்சித்தே தீருவான். பரீட்சிக்காமல் விடவேமாட்டான். உதாரணமாக, உலகில் பல அரசாங்கங்கள், ஆட்சிகள், சாதாரண சங்கங்கள், கழகங்கள், இயக்கங்கள் முதல் சர்வதேச சங்கமாகிய ஐக்கியநாடுகள் சபை வரை இருந்துவருகின்றன. இவைகளின் பிரஜையாகவோ, உறுப்பினராகவோ, ஊழியராகவோ இருக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளின் அதிபர்களுக்கு அறிவித்து விண்ணப்பித்துக் கொள்கின்றனர். விண்ணப்பத்தையொட்டி சம்பந்தப்பட்ட தலைவர்கள் பரிசீலனைக்கு எடுத்து விண்ணப்பதாரரை பலவிதங்களில்பரீட்சிக்கிறார்கள். பரீட்சையில் பெரும்பாலும் தேறிவிட்டால் தமது பிரஜையாகவோ உறுப்பினராகவோ ஏற்று அவர்களுக்குரிய பெயர், அடையாளம், அந்தஸ்து முதலியன்வைகளை நிர்ணயித்து, விளம்பரப் படுத்தி அவர்களது நன்மையில் உதவியும், அவர்களுக்கு ஏற்படும் தீமைகளைக் களைவதில் அக்கறையுடன் அதிகக் கவனம் செலுத்தி ஆவன செய்தும் வருகிறார்கள். பரீட்சையில் தேறாவிட்டால் விண்ணப்பதாரியை விட்டுவிடுகின்றனர். இவ்வுண்மை உலகில் இன்றும் நடைமுறையில் இருந்துவருவது யாவரும் அறிந்ததே.

மேற்கூறிய முறைகளுக்கேற்ப, நாம் 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி' 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வேயாகும். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அல்லாஹ்வின் தூதராகும் என்ற அருத்தமுடைய கலிமாவைக் கூறி சர்வலோகங்களுக்கும் அதிபதியும் அரசனுமாகிய அல்லாஹு தஆலாவிடம் விண்ணப்பம் செய்துகொண்டோம். அதாவது, சர்வலோகங்களையும் அதிலுள்ள

வைகளையும் படைத்துப் பாதுகாத்து, இரட்சித்து வருபவனுகிய அல்லாஹ்வே! உனது ராஜ்ஜியத்தில் உனது பிரஜையாக-அடிமையாக இருக்க விரும்புகிறேம். நீயே எங்களின் எஜமானன், அரசன். உனது கட்டளைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டோம். அதன்படியே எப்பொழுதும், என்றும் நடந்துவருகிறேம். உன்னையே முற்றிலும், முழுவதும் நம்பியிருக்கிறேம். உன்னிடமே தஞ்சமடைகின்றேம். உன்னையன்றி எவரையும் எப்பொழுதும் எதற்காகவும் எஜமானனுக ஏற்றுக்கொள்ள மாட்டோம். முஹம்மது ஸல் அவர்களை உனது தூதராகவும் எங்களின் வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டோம்; நம்பிக்கொண்டோம். அவர்கள் மூலம் நீ எங்களுக்கறிவித்த சகல விஷயங்களையும் நம்புகிறேம்; ஏற்றுக்கொள்கிறேம். அவர்கள் ஏவியவைகளைச் செய்துவருகிறேம். விலக்கியவற்றை விட்டுவிட்டோம். அன்னாரைப் பின்பற்றினுல்தான் உனது பிரியத்திற்காளாவோம் என்பதை முற்றிலும் நம்பி ஏற்றுக்கொண்டோம். அவருக்குக் கீழ்ப்படிவதே உனக்கு வழிப்படுவதாகும். அவரது பிரியமே உனது பிரியமாகும் என்பதை எங்களின் இருதயப்பூர்வமாக ஏற்று அவரையே எங்களுக்கு அழகிய முன்மாதிரியாகக் கொண்டு அவரது ஆக்ஞைகள், விருப்பங்களின்படியே நாங்கள் எப்பொழுதும் நடந்துவருகின்றேம். எனவே எங்களை உனது பிரஜைகளாக அடிமைகளாக ஏற்று எங்களை எப்பொழுதும் பாதுகாத்து இரட்சித் தருள்புரிவாயாக என்பவைகள் போன்றதாகும்.

இவ்வாறு நாம் விண்ணப்பித்து உறுதிமொழி கூறியது மனப்பூர்வமாகக் கூறியதுதாஞ? உண்மையானதா? உறுதியானதா? மனதில் இல்லாமல் உதட்டளவில் கூறுவதா? ஏமாற்றுவதா? என்ன

வென்பதைப் பரீட்சிக்கவே தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு ஆகியவற்றில் ஜக்காத்தும் ஹஜ்ஜும் பணக்காரர்களுக்குரிய பிரத்தியேகப் பரீட்சையாக்கி, ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடின்றி கலிமாச் சொன்ன அனைவருக்குமே பொதுப் பரீட்சையாக, தொழுகை, நோன்பு ஆகிய இரு செய்கைகளையும் இறைவன் ஏற்படுத்தியுள்ளான். இவ்விரு செய்கைகளையும் நாம் அனுஷ்டித்து வந்தால்தான் பரீட்சையில் தேறுவோம். பரீட்சையில் தேறிவிட்டால் இறைவனும் நம்மைத் தனது பிரஜையாகவும் அடிமையாகவும் அங்கீகரிப்பான்; அருள்புரிந்து ஏற்றுக்கொள்ளுவான்.

لِكُلِّ شَيْءٍ عَلَمٌ وَعَلَمُ الْإِيمَانِ الصَّلٰوةُ

“ஒவ்வொரு வஸ்துவுக்கும் அடையாளம் இருக்கிறது. ஈமானுடைய அடையாளம் தொழுகையாகும்” என்று எம்பெருமான் ஸல் அவர்கள் கூறியுள்ளதற்கேற்ப ஈமான் உள்ளவர்களுக்கு அடையாளம் தினசரி ஐங்காலத் தொழுகை தொழுதுவருவதாகும்.

கலிமாச் சொல்லி அல்லாஹ்வைத் தமது எஜமானனாகவும், முஹம்மது ஸல் அவர்களை அவனின் தூதராகவும் ஏற்றுக் கொண்டு, தம்மை (பிரஜை) அடிமையாக ஏற்றுக்கொள்ள அல்லாஹ்விடம் விண்ணப்பித்துக் கொள்ளும் அனைவருக்கும் இவ்வைங்காலத் தொழுகை ஏழை, பணக்காரர் என்ற விதிவிலக்கில்லாமல் எல்லோரும் அனுஷ்டித்துவர வேண்டிய முக்கிய முதற் பரீட்சையாகவும்—தலைமையானதாகவும் அமைந்திருக்கிறது.

77895

## இனி மறு பரீட்சை நோன்பாகும்.

உலகில் நடைபெறும் பரீட்சைகளில் மற்றவர் பார்ப்பதற்கு ஏதுவான முறையில் பரீட்சிப்பதும் எவரும் பார்க்க முடியாமல் தனித்தனியே இரகசியமாகப் பரீட்சிப்பதும் உண்டு. உதாரணமாக, ஆரம்பவகுப்புக்களில் படிக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் ஏனையோருக்கும் தெரியக்கூடியவாறு சாதாரணமாகப் பரீட்சிக்கிறார்கள். மேல் வகுப்புக்களில் படித்த மாணவர்களில் அநேகர் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கப் பரீட்சைக்குச் செல்லுகிறார்கள். இவர்கள் இதர மாணவர்களோடு சேர்ந்து பலரும் அறியப் படித்தவர்கள். அரசாங்கத்தார் அவர்களைப் பிரித்துத் தனித்தனியே வைத்து இரகசியமாகப் பரீட்சிக்கிறார்கள். இப்பரீட்சையில் ஈடுபடுபவர்கள் ஊர் ஒப்புக்காகவோ பிறர் மெப்புக்காகவோ பெற்றோர் மற்றோர் வற்புறுத்தலுக்காகவோ, பயமுறுத்தலுக்காகவோ, பலாத்காரத்திற்காகவோ, பெரிய இடத்தில் பெண் கிடைக்கும் என்பதற்காகவோ,பிறரை ஏமாற்றுவதற்காகவோ,'ஊரோட ஒக்க ஓடு, நாடோட நடுவே ஓடு' என்பதற்காகவோ இல்லாமல் உண்மையாக-மனப்பூர்வமாக உள்ளது உள்ளபடி உணர்ந்து, அறிந்து ஆராய்ந்து, ஆவலோடு படித்த மாணவராயிருந்தால் பரீட்சையில் தேறிவிடுவார்கள். பரீட்சையில் தேறியவர்களுக்கு பட்டமும் பதவியும் அந்தஸ்தும் அலவுன்சும் பாதுகாப்பும் கண்ணியமும் கௌரவமும் கொடுக்கிறார்கள். அவர்களது கோரிக்கைக்கு முக்கியத்துவமும் கொடுக்கிறார்கள். அவர்களுக்கேற்படும் இன்னல்களை நீக்குவதிலும், எல்லா நலன்களையும் பெருக்குவதிலும் அதிக கவனம் செலுத்தி அவர்களுக்கு அனுகூலம் புரிவதே தங்கள் முக்கிய முதற் கடமையாகக் கொண்டு ஆவன செய்து வருகிறார்கள்.

இதே மாதிரியாக லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் என்றும் முஹம்மத் ஸல் அவர்கள் அல்லாஹ்வின் தூதராகுமென்றும் பொருளுடையதும், விரிவான வியாக்கியானங்களும் கருத்துக்களும் நிறைந்ததுமான திரு கலிமாவை எல்லோரோடும் சேர்ந்து பலருமறியப் படித்தவர்களைப் பரீட்சிப்பதற்காகவே வல்ல நாயன் அல்லாஹு தஆலா ஒவ்வோராண்டிலும் றமளான்மாதம் முழுவதும் தினசரி வைகறை தொடுத்து சூரியாஸ்தமனம் வரை உண்ணாமலும், பருகாமலும், புணராமலும் தனக்காக நோன்பிருந்துவர வேண்டுமென்ற இரகசியப் பரீட்சையை ஏற்படுத்தியுள்ளான்.

விசுவாசம் (ஈமான்) கொண்டோமென்று கூறுபவர்கள் அனைவருக்குமே ஏழை,பணக்காரர் என்ற விதிவிலக்கின்றி ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தனித்தனியே நிறைவேற்றிவர வேண்டுமென்று இரகசிய முறையாக இறைவன் நோன்பை ஏற்படுத்தியுள்ளான். எனவே இந்நோன்பு வைப்பதன் மூலமே நாம் எவருடைய தயவு காட்சண்யத்திற்காகவும் பெற்றோர்கள்பெரியோர்கள் மற்றோர்களுடைய விருப்புவெறுப்பிற்காகவும் வற்புறுத்தல் பயமுறுத்தல் பலாத்காரத்திற்காகவும் பரம்பரைப் பழக்க வழக்கம் என்பதற்காகவும் ஊர் ஒப்புக்காகவும் பிறர் மெச்சுதலுக்காகவும் பிறரை ஏமாற்றுவதற்காகவும் இல்லாமல் உள்ளது உள்ளபடியே உண்மையாக மனப்பூர்வமாக உறுதியாக உணர்ந்து அறிந்து ஆராய்ந்து அல்லாஹ் ஒருவனையே நம் தலைவனாகவும் எஜமானனாகவும் அரசனாகவும் அதிபதியாகவும் ஏற்றுக் கொண்டோம்; விசுவாசங்கொண்டோம். முஹம்மத் ஸல் அவர்களை அல்லாஹ்வின் தூதராகவும் நமது வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டோம்.

அவ்விருவரின் விருப்பத்திற்கும் கட்டளைக்கும் கீழ்ப் படிந்து எப்பொழுதும் என்றும் தவருமல் நடந்து கொள்கிருேமென்பதை அந்தரங்க சுத்தியாக எடுத் துக்காட்ட முடியும். ஆகையால் சகோதரர்களே ஈமான் கொண்டோமென்று கூறுபவர்களைச் சோதிப்பதற்காக அநேக பரீட்சை முறைகளை அல்லாஹு தஆலா ஏற்படுத்தியிருப்பதில் முதல் முக்கிய பிரதானமானதாயும் அவைகளுக்கெல்லாம் தலைமையானதாயும் அசல் அடிப்படையானதாயும் அனுஷ்டிப்பதற்கு இலகுவானதாயும் ஏழை-பணக் காரர் முதலாளி-தொழிலாளி கற்ருேர்-மற்ருேர் ஆடவர்-பெண்டிர் என்ற விதிவிலக்கின்றி எல்லோ ரும் அவசியம் அனுஷ்டித்துவர வேண்டியதாயு முள்ள தொழுகை, நோன்பு என்னும் இவ்விரு பரீட் சைகளேயாகும். இவ்விரு பரீட்சைகளிலும் ஈடுபடு வதே இதர எல்லாப் பரீட்சைகளிலும் ஈடுபட ஏது வாகும். எனவே ஈமான் கொண்டோமென்றும் கலிமா சொல்லுகிருேம் என்றும் கூறிக்கொண் டிருக்கும் நாம் அனைருவம் அல்லாஹு தஆலாவின் கட்டளைகளின்படியே நடந்துவந்தால்தான் அவ னது பரீட்சைகளில் தேருவோம். உண்மையாளர் களாகவும் உறுதியுடையவர்களாகவும் ஆவோம். அல் லாஹ்வும் நம்மை தனது பிரஜைகளாகவும் அடிமை ளாகவும் அங்கீகரித்து இருபதியிலும் இன்புற்றிருப் பதற்குரிய எல்லாவித சம்பத்துக்களையும் தந்து அருள்புரிந்து ஆதரிப்பான்.

அவ்வாறு அல்லாஹ்வின் கட்டளைகளைத் தழுவி நடந்துவருபவர்களுக்கே முஸ்லிம்கள் (வழிப்படுப வர்கள்) என்ற பெயரும் மாந்தரிற் சிறந்தோர்க ளென்ற பட்டமும், மற்ற மக்களையும் அல்லாஹ்வின் பால் அழைக்கவேண்டும் என்ற பொருப்பையும் தந்துள்ளான். அவ்வரறின்றி, ஈமான் கொண்டோ

மென்று கூறிக்கொண்டு இறைவன் இட்ட கட்டளைகளின்படி நடக்காமல் ஏமாற்றித் திரிபவர்களை இறைவன் தள்ளிவிடுவான். இதுமட்டுமல்ல; சாதாரணமாக இவ்வுலகில் பொய்கூறுபவர்கள்-ஏமாற்றுகிறவர்களுக்கு இன்னின்ன தண்டனைகள் என்று அரசாங்கம் சட்டமியற்றி அவ்வாறு செய்பவர்களை அம்பலப்படுத்தி தண்டனைக்கு உள்ளாக்குகின்றது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இதேபோன்று ஈமான்கொண்டுவிட்டோமென்று கூறி அமல் செய்யாமல் இருப்பவர்களை இறைவன் அம்பலப்படுத்தித் தண்டனைக்குள்ளாக்குவான். அல்லாஹு தஆலா தனது திருமறையில் கூறுவதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

وَمِنَ النَّاسِ مَنْ يَقُولُ آمَنَّا بِاللَّهِ وَبِالْيَوْمِ الْآخِرِ
وَمَا هُمْ بِمُؤْمِنِينَ ○ يُخَدِعُونَ اللَّهَ وَالَّذِينَ آمَنُوا
وَمَا يَخْدَعُونَ إِلَّا أَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُونَ ○
فِي قُلُوبِهِمْ مَرَضٌ فَزَادَهُمُ اللَّهُ مَرَضًا وَلَهُمْ عَذَابٌ
أَلِيمٌ بِمَا كَانُوا يَكْذِبُونَ ○

“அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசங் கொண்டிருக்கிறோம் என்று கூறுபவர் மனிதரிற் சிலருண்டு. ஆனால், அவர்கள் (உண்மையில்) விசுவாசங்கொண்டவர்களல்ல. அவர்கள் (இவ்விதங்கூறி) அல்லாஹ்வையும், விசுவாசிகளையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால், அவர்கள்

தங்களையன்றி வேறெவரையும் ஏமாற்றமுடியாது. இதை அவர்கள் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். அவர்களின் இருதயங்களில் (வஞ்சக) நோய் உண்டு. எனவே அவர்களுக்கு அந்த நோயை அல்லாஹ் அதிகமாக்கிவிட்டான். (இவ்விதம்) அவர்கள் பொய்சொல்லுவதால் மிகத்துன்புறுத்தும் வேதனை அவர்களுக்கு உண்டு." (குர்ஆன் 2: 8, 9, 10)

ஆதலால் இவ்வாறு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நயவஞ்சகர்களைப்போல் ஆகாமல் நாம் அனைவரும் உண்மை விசுவாசிகள்தாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இறைவனிட்ட கட்டளைப்படி எப்பொழுதும் நடந்துகொள்வோமாக!

அல்லாஹ்வே! எங்களையும் இதைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் மற்றும் யாவரையும் உனது உண்மை விசுவாசிகளாகவும் அடியார்களாகவும் ஆக்கி, இருபதியிலும் எல்லாவித சம்பத்துக்களையும் தந்து எங்களின் நன்னோக்கங்கள் அனைத்தும் நிறைவேற அருள்புரிவாயாக! ஆமீன்.

[இதைக் கண்ணுறுபவர்கள் ஏனைய சகோதர சகோதரிகளையும் படிக்கவோ, கேட்கவோ செய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம்]

தங்களின்

**இஸ்லாமிய ஊழியர் சங்கம்,**

**இளங்காகுரிச்சி P. O.**

**திருச்சி ஜில்லா.**

நூருல்ஹக் பிரஸ், இஸ்மாயீல்புரம், மதுரை.